செ.வெ.எண்: 963/2017 நாள்: 13.12.2017

**கன்னியாகுமரி மாவட்ட ம், பறக்கை, தென்தாமரை குளம்பகுதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், ஒகி புயலால் சேதமடைந்த பயிர்களை நேரில் பார்வையிட்டார்.**

---

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், பறக்கை - தென்தாமரைக்குளம் சாலையில் உள்ள கக்கன்புதூர் பகுதியில் ஓகி புயலினால் பாதிக்கப்பட்ட பயிர் சேதமடைந்த பயிர்களையும், அகஸ்தீஸ்வரம் தாலுகா, வடக்கு தாமரைக்குளம் பகுதியில் பழையாறு சீரமைப்பு பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (13.12.2017) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் சேதமுற்ற வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்கள் குறித்து கணக்கெடுக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இதுவரை 95 ஹெக்டேர் நிலப்பரப்பில் 2916 விவசாயிகளுக்கு சொந்தமான 16,633 தென்னை மரங்களும், 316.53 ஹெக்டர் நிலப்பரப்பளவில் 764 விவசாயிகளுக்கான நெற்பயிர்களும் சேதமடைந்துள்ளன. தோட்டக்கலைத்துறை பயிர்களான வாழை 1693.16 ஹெக்டர் பரப்பளவிலும், மரவள்ளி 127.90 ஹெக்டர் பரப்பளவிலும், ரப்பர் 1363.53 ஹெக்டர் பரப்பளவிலும் என மொத்தம் 16259 விவசாயிகளின் 3310.13 ஹெக்டர் தோட்டக்கலை பயிர்களும் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. பயிர்சேதம் கணகெடுக்கும் பணியினை உடன் முடிக்கவும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தேவையான ஆலோசனைகளையும் வழங்கி நிவாரண உதவிகளை செய்ய, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின் போது, வேளாண்மை இணை இயக்குநர் திரு. பாண்டியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு. நிஜாமுதீன், வேளாண்மை துணை இயக்குநர் திரு. ராஜ்குமார் அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு. சஜீத் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**